காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

6 34

ஆ., சேக்கிழார் தொண்டைமான், 10.3.70.



26—2—70 அன்று தமிழ்நாடு சட்டசபையில் மாண்புமிகு நிதியமைச்சர் மதியழகன் அவர்கள் வரவு செலவு திட்டத்தை தாக்கல் செய்த காட்சி.

8-3-70

உரைகல்:

முக்கனிச்சாறு

பக்கங்கள்: 64 விலை: 1-00

கிடைக்குமிடம்:

குயில் பதிப்பகம்,
9, காமாட்சியம்மன் கோயில் வீதி,
திண்டிவனம்.

அறுபத்துநான்கு கவிஞர்களின் அழகு மலர்க் கவிதைகளால் தொகுக்கப்பெற்ற கன்னித் தமிழ்க் கதம்பம் இந்நூல்.

'மாம்பழம் போல் இனிக்கும் அறிஞர் அண்ணாவின் அரசியல், பலாப்பழம் போல் சுவைதரும் தந்தை பெரியாரின் சமுதாய சீர்திருத்தம், வாழைப் பழம் போல் இனிமைதரும் பாவேந்தர் பாரதி தாசனின் புரட்சிப் பாடல்கள்' ஆகிய மூன்று நிலைகளில் 'முக்கனிச்சாறு' படைத்துள்ளார் டாக்டர் கே. எம். ஏ. வஃகாப் அவர்கள்.

"பகுத்தறிவுச் சுடர் ஏற்றியவன் மூடப்
பழமைக்கோர் நெருப்பு—அவன்
உகுத்திடும் அன்பு மொழிகள்
அனைத்தும்
உயர்தேன் பால் பருப்பு"

என்று கவிஞர் கண்ணிமை பெரியார் பற்றிப் பாடுகின்றார்.

"குறளைத் தந்த பெரியாரின் பின்
இந்தத் தாடிக்காரப் பெரியார்போல்
ஒரு பெரியார் பிறப்பதில்லை"

என்று அறுதியிட்டு உறுதியுடன் பாடுகிறார் கவிஞர் சாலை. இளந்திரையன் அவர்கள்.

"ஆரியத்தை வேரறுக்க
உரியர்—சாதி
ஆணவத்தைத் தானழித்த
பெரியார்–இந்த
மாநிலத்து வீதியிலே
காலெடுத்து வைத்துஅவர்
மேலெடுத்து வந்தபகை
ஓட்டி—மானங்
காட்டி—அறிவை
யூட்டி—பெருமை
நாட்டி—உண்மை கூட்டி!"

எனப் பெரியார் புகழ்பாடி, சந்தக் கவிஞர் என்ற பெயர் தேடிக்கொண்டுள்ளார் புலவர் மா. சொக்கலிங்கம் அவர்கள்.

புதுவை வாழ் புதுமைக் கவிஞர் அரிமதி. தென்னகன் அவர்கள்,

"தனித்தமிழர் ஆட்சிஇது தாங்கும்
புகழ்க்கெல்லாம்
அண்ணல் அறிஞர் அறிவுலக மேதை
யெனும்
அண்ணாவின் அன்பு அறநெறியே
காரணமாம்"

என்று தனித்தமிழர் ஆட்சி கண்ட தணியாத ஆர்வத்தால் பாடுகிறார்.

"தமிழ்நாட்டின் அரசியலைத்
தமிழுணர்வாற் புதிதாக்கித்
தமிழர் நெஞ்சை
அழகுரையால் அன்பதனால்
ஆட்கொண்டார் எங்குற்றார்
அறிஞர் அண்ணா"

என்று தமிழ்த்தாயின் மூத்த தலைமகனை எண்ணி ஏங்குகிறார் கவிஞர் பொற்கோ அவர்கள்.

புதுவைக் கவிக்குயில் பாரதிதாசனை,

"தித்திக்கும் அழகுதமிழ்த் தேனடையைப்
பிய்த்தெடுத்துத்
தின்எனக் கொடுத்த தமிழ்ப் புலவன்—
வெறி
செய்யுமமிழ் தைக்கவிசெய் வலவன்..."

எனப் புகழ்ந்து பாடுகிறார் கவிஞர் சக்திக் கனல். கவிஞர் வ சிவசங்கரன் அவர்கள் "பாடாத பொருளுண்டோ? பாவேந்தர்தம் பாட்டுக்குள்சிக்காதபொருளும்உண்டோ" எனப் பாவேந்தருக்கும் பாமாலை சூட்டி மகிழ்கிறார். "இளங்கவிஞர்களின் புலமை நயம் கவிநயத்தோடு கலந்தோடி தேன் கொட்டிப் புனலாடச் செய்கிறது" என்று அணிந்துரை வழங்கியுள்ள அமைச்சர் கவிஞர் கா. வேழவேந்தனார் பாராட்டுரை முற்றிலும் உண்மையே!

ஆங்காங்கே சில அச்சுப் பிழைகள் காணப்படுகின்றன.

மொத்தத்தில் முக்கனிச் சாறு, தமிழகம் பெற்ற பேறு! 'கண்ணிமை' தொகுத்த இக்கவி மலரைக் கண்ணினை இமை காப்பதுபோல் காக்க வேண்டியது தமிழர்தம் கடமை.

சித்திரப் பந்தல்

ஆசிரியர்: ஆலந்தூர்
கோ. மோகனரங்கன்.

பக்கங்கள்: 96 விலை ரூ. 2-00

வெளியீடு: வசந்தா பதிபபகம்,
605, முத்துக்குமாரசாமி சாலை,
ஆலந்தூர், சென்னை—16.

"செந்தமிழ்த் தாயின் இளமுறுவல்—அது
செல்வக் குழந்தையின் தேன்முறுவல்"

எனத் தமிழன்னையின் வழிபாட்டுடன் தொடங்கும் சித்திரப் பந்தல்.

"திலகமென நாட்டார்கள் நெஞ்சி
லெல்லாம்
திகழ்கின்றாள், புகழ்ச்செடியில் மலர்ந்து
விட்டாள்"

எனத் தில்லையாடி வள்ளியம்மை, புகழச் செடியில் மலர்ந்துவிட்ட பொலிவோடு நிறைவு பெறுகின்றது. தமிழோடு தொடங்கி வரலாற்றுடன் முடிவடையும் சித்திரப் பந்தலுக்குள் எழில் உண்டு; யாழ் உண்டு; தேன் உண்டு உறவு உண்டு அமைதி உண்டு அரங்கம் உண்டு; கண்கள் உண்டு;—அத்தனையும் கற்கண்டு

"கனியினும் இனிய சொற்கள்
கடலினும் பெரிய ஆற்றல்
பனிமலர் மென்மை உள்ளம்
பகைவரும் வணங்கும் பண்பு
தனியனைப் பிரிந்து சென்றால்
தாங்குமோ எங்கள் ஆவி?
இனியஉன் பேச்சை நாங்கள்
என்றுதான் கேட்ப தண்ணா?"

எனக் காஞ்சித் தலைவனை வாஞ்சையுடன் பாடி,

"ஒருமுறை மீண்டும் உன்றன்
ஒளிமுகம் காட்ட வாராய்"

என வருந்தி அழைக்கின்றார். படிப்போர் நெஞ்சைப் பாகாய் உருகவைக்கின்றார்.

மொத்தத்தில். சித்திரப் பந்தல், செந்தமிழ் அன்னைக்கு ஒரு சிங்காரப் பந்தல்; நமக்கு இதயத்தை ஈர்க்கும் இன்னிசைப் பந்தல்; ஆலந்தூர் கவிஞருக்கு ஒரு புகழ்ப் பந்தல்.

—கவிஞர் மணிவேந்தன், எம். ஏ.,

சந்தனப் பேழையுள் செந்தமிழ்ப் புரவலன்

புலவர். தி. கு. பத்மநாபன்.

தமிழகத்தின் தலையெழுத்தோ? தென்னவர்தம் ஊழ்வலியோ?
கழகத்தின் காவலனைக் கடும்பிணியும் வாட்டியதே!
உவமைச்சொல் உத்தமனை உலகத்தின் ஒளிவிளக்கை
ஒருமைக்கு உழைத்துவந்த பெருமையெலாம் உடையவனைத்
தருமம் கொடுத்தவனைத் தன்மானம் காத்தவனைக்
கரும விதிவந்து கதிகலங்க வைத்ததம்மா!
தம்பியருக் குழைத்து தளர்ந்தநிலை வந்தடைந்து
கும்பிக்குள் குந்திற்றே கொடுநோயாம் அம்மா
படையோடு பரணிபுகழ் நடைபோடும் அறிஞருடல்
அடையாறு புற்றுமனை அடைந்திற்றே அகிலம்அழ!
பேச்சில்லை மூச்சில்லை! பிப்ரவரி மூன்றினிலே
போச்சே! புறப்பாட்டுப் பொன்தலைவன் புனிதஉயிர்!
அண்ணாவைக் கேட்டழுதே அலறித் துடித்த மக்கள்
கண்ணீரால் சென்னையினைக் கடலாக்கி அலைந்தனரே!
பங்காரு அன்னைபெற்ற பைந்தமிழப் பெருந்தலைவன்
மங்காத புகழோடு மாப்பயணம் தொடர்ந்தனனே!
குடிஒடிந்து வாடுகின்றோம்! கொற்றவனே உன்னிழப்பால்
படியளந்த கையினையாம் பார்ப்பதுதான் எத்தினமோ?
கடமையுடன் கண்ணியமும் கட்டுப்பா டதனையும்தான்
உடமையெனக் கொண்டவனே! ஓய்வெடுக்கச் சென்றனையோ?
சந்தனப் பேழையுள்ளே செந்தமிழ்ப் புரவலனாய்ச்
சந்ததமும் வாழ்ந்திருக்கச் சாவுலகம் சென்றனையோ?

—புலவர் தி. கு. பத்மநாபன்.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 8—3—70 | இதழ் 34

சோஷலிச அரசின் பட்ஜெட்?

உள்ளத்தில் ஒளி இருந்தால் உண்மை ஒளிவிடும் என்பார்கள், தெளிவற்ற நிலையிலிருந்துகொண்டு, ஒன்றைத் தெளிவு படுத்திக்காட்ட முடியும் என்பதை ஒப்புக்கொள்ள முடியவில்லை. இதுபோலவே தெளிவற்று இருக்கும் ஒன்றைப்பற்றியும், தெளிவுபடுத்திக் காட்ட முடியும் என்பதும் முடியாததுதான். இந்தக் கிழமை தொடக்கத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மத்திய அரசின் பொதுபட்ஜெட்பற்றிய மட்டில் நாட்டு மக்களுக்கும் தெளிவில்லை — பட்ஜெட்டைத் தயாரித்தவர்களுக்கும் தெளிவிருப்பதாக நம்ப முடியவில்லை.

ஏன் இதனை, இந்தக் கோணத்திலிருந்து எடுத்துக் காட்ட விரும்புகிறோம் என்றால், மத்திய பொது பட்ஜெட்டில் சில இனங்களின் மீது வரியை உயர்த்தி அறிவித்திருப்பதன் மூலம், இந்த நாட்டு மக்கள் எப்படிப்பட்ட வாழ்க்கைத்தரத்தில் இருந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை தெளிந்து, தெரிந்துவைத்துக் கொண்டுதான் செயல்படுகிறார்கள் மத்திய அரசினர் என்பதை நம்பமுடியாமலிருப்பதுதான்.

ரூ 170 கோடிக்குப் புது வரியினங்களையும், தீர்வையையும் அதிகப்படுத்தி இருக்கிறார்கள். அடித்தளத்தில் மட்டுமல்லாது, நடுத்தரத்தில் வாழ்வோரும் பெரும் பகுதியும் பயன்படுத்தும் ஒன்றுதான் மண்ணெண்ணெய். சர்க்கரை போன்றவை. மணியார்டர் கட்டணமும், தபால், தந்தி கட்டணங்களும் பெரும்பான்மை மக்களுக்குப் பயன்படுவதாகும்.

இந்தப் பொருள்கள் யாவும், ஏற்கனவே மக்களது தாங்கும் சக்தியைக் காட்டிலும் அதிக அளவு இருந்து கொண்டிருக்கும்போது, மீண்டும்மீண்டும் இவைகளின் விலை உயர்வுக்கு வழிகோலிக்கொண்டிருப்பதானது, மக்கள் நிலையை உணர்ந்துகொண்டிருக்கவில்லை ஆட்சியாளர்கள் என்று தெளிவாகத் தெரிகிறது.

புள்ளி விவரங்கள் மூலமே மக்களது வாழ்க்கைத் தரத்தைக் கணித்துக் கணித்து முடமாகிப் போயிருக்கிற காரணத்தாலேயே, உண்மையான நடைமுறைகளைப்பற்றி உணர்ந்துகொள்ள முடியவில்லைபோலும்!

அரசினரின் புள்ளிவிவரம் காட்டுகிற வாழ்க்கைத் தரத்தின் உயர்வுக்கும் நிதர்சன நிலைமைக்கும் பயங்கரமான வேறுபாடு நிலவிக்கொண்டிருக்கிறது என்பதனை ஆட்சிக்கோல் பற்றி இருப்போர் ஒப்புக்கொள்ள மறுத்துவிடுகிறார்கள்.

இதே வேளையில், ஏழை எளியவர்கள்பற்றி வாய் மலியப் பேசிப் பேசி இதயங்களை நீவிவிட முன்வரும் போக்கும் மலிந்துகொண்டிருக்கிறது. இத்தகு போக்கு காரணங்களால், வாழ்க்கை என்பதனைப் பற்றிய ஏதோ ஒருவிதமான மானசீகக் கற்பனையைத் தன் மனதுக்குள் உருவகப்படுத்திக்கொண்டு, எதார்த்தத்துக்குள் அடியெடுத்துவைக்க முனையும்போது, பயங்கரமான வேறுபாடுகளையும், சுமைகளையும் கண்டு திகைத்துத்தான் போகிறான் மனிதன்!

காபி, தேயிலை முதலானவைகள்மீது ஏற்றிவைக்கப்பட்டிருக்கிற தீர்வை உயர்வுகள் மனிதனை மிகவும் நம்பிக்கை இழக்கச் செய்துவிடக்கூடும், ஏற்றுமதியை ஊக்கப்படுத்த வேண்டும் என்ற காரணத்துக்காக ஏற்றுமதி தேயிலைக்குச் சில சலுகைகளைக் காட்டிவிட்டு அந்தச் சலுகைகளைச் சரிக்கட்டிக் கொள்ள உள்நாட்டில் இருந்து "பறித்து"க் கொள்ள முனைவது எந்த மாதிரியான "முற்போக்கு" என்பதும் புரியவில்லை.

நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முதலீட்டு மூலதனச் சேகரிப்புக்கென்ற பல்லவி காரணமாக சாதாரண மக்களது வாழ்க்கையினைச் சுமையுடையதாக்க நினைப்பது சரியான நடைமுறை ஆகாது. கடந்த திட்டங்களால் தூவப்பட்டிருக்கும் 20000 கோடிக்கு மேலான ரூபாய்கள் எந்த விளைவைக் கொடுத்திருக்கின்றன என்பதற்கான துல்லியமான விளக்கத்தை இதுவரை யாரும் கொடுக்கவில்லை. அவைகளின் மூலம் ஏழை எளியவர்கள் பயன்பெற முடியவில்லை என்பதை நாட்டுப் பேரறிவாளர்கள் எல்லாருமே ஒருமுகமாகக் கூறி இருக்கிறார்கள்.

ஆகவே, வரி உயர்வு காரணமாகத் தொல்லைப் படுவது ஒன்றைத் தவிர, வேறு எந்தப் பலனையும் அனுபவிக்காதவர்கள், பட்ஜெட்டின்சுமையை ஏற்கவேண்டுமென்று நிர்ப்பந்திப்பது வருந்தத்தக்கதும், கண்டிக்கத்தக்கதுமாகும்.

வருமான வரிக்கான வரம்பை உயர்த்தி விட்டிருப்பதன் மூலம் சில ஆயிரக்கணக்கான பேர்களுக்கு மட்டும் சலுகை காட்டிவிட்டு, பல கோடிப் பேர்களை கூனச் செய்வானேன்?

திட்டப் பலன்களால், பயனடைந்தோர் மிக மிகச் சொற்பமானோர்தான் என்று மத்திய அரசின் சில பொறுப்பானவர்களே கூறுகிறார்கள், அந்த சிலரிடமிருந்து, அதிக வரி விதிப்புக்களுக்கு வழி செய்து கொள்ளக்கூடாதா? என்றெல்லாம் ஏழை நெஞ்சம் எண்ணிப் பார்க்கத்தான் செய்கிறது.

நகர்ப்புற சொத்துக்களுக்கு உச்சவரம்பும், செல்வ வரியும் விதிக்கப்பட்டிருப்பது, தங்கள் சோஷலிசக் கொள்கையை யாரும் குறைகூறிவிடக் கூடாதே என்பதற்காகத்தான் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தக் கூப்பாடு இல்லையென்றால், அந்தக் குபேரர்களுக்கு இன்னும் மடை திறந்து விடப்பட்டிருக்கும்.

சோஷலிசம் என்ற கொள்கைவழிப் போக முயல்வோர் மேட்டைச் சமப்படுத்த முயலவேண்டும், பள்ளத்தையும் சமநிலைக்குக் கொண்டு வர முயல வேண்டும்.

மேட்டையும் சரித்து, பள்ளத்தையும் ஆழப்படுத்துவதானது, நிலைமையில் மாற்றத்தை யுண்டாக்காது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

(13-ம் பக்கம் பார்க்க)

[13]

"பூரணம் கொடிதா? மனக் குழப்பத்தோடு கூடிய வாழ்க்கை கொடிதா?" என்று காஞ்சியை நோக்கிச் சென்று கொண்டிருந்த நடனா, காவலாளியைக் கேட்டாள். பொழுதுபோக்குக்காக ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர். இடையே இக்கேள்வி பிறந்தது. காவலன், "மனக் குழப்பத்தோடு கூடிய வாழ்வுதான் மிகவும் கொடியது" என்று பதில் கூறிவிட்டு, ஆனால், மனக்குழப்பம் நீங்கும் மார்க்கம் ஏற்பட்டுவிட்டால், வாழ்வு துலங்குமல்லவா? அதற்காகத்தான் சற்றுப் பொறுத்துக்கொண்டால், பிறகு நிம்மதி ஏற்பட்டதும், வாழ்வின் பயனைப் பெறமுடியும் கஷ்டம் ஏற்பட்டதும். கலங்கி உயிரைப்போக்கிக் கொண்டால், பெரிய நஷ்டமாகுமல்லவா?" என்று கூறினான்.

"உண்மைதான்! உத்தமன் என்ற உன் பெயருக்கேற்றபடியே, உன்எண்ணமும் இருக்கிறது. ஆனால், ஒருவர் இறந்துபோனால், வருத்தப்படும் ஆட்கள் இருந்தால், அந்த மரணத்தால் கஷ்டமும் விளையும்; நஷ்டமும் உண்டு. ஆனால் என்னைப்போல ஒரு அபலை; திக்கற்றவள்; கஷ்டமனுபவித்துக்கொண்டு காலந் தள்ளுவதைவிட இறந்து போவதால் நஷ்டமொன்று மில்லையல்லவா?" என்று கேட்டாள் நடனா. காவலாளி, "உமது கேள்வியே எனக்கு வருத்தமூட்டுகிறது. உமது மரணத்தால் யாரும் வருத்தமடைய மாட்டார்கள் என்று நீர் எண்ணுவது, உமது நண்பர்களுக்கு நீர் துரோகம் செய்வது போன்றதாகும். ஏதோ பொழுது போகப் பேசுகிறீர் என்று எண்ணினேன். உண்மையிலேயே நீர் தற்கொலை செய்துகொள்ளப் போவதாக எண்ணவேண்டியிருக்கிறது. உமது விபரீதமான பேச்சைக் கேட்டபின், தயவுசெய்து தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள். தற்கொலை கோழைத்தனம்; துரோகம்" என்று படபடத்துக் கூறினான் காவலாளி. சில நிமிடங்கள் இருவரும் மௌனமாகவே சென்றுகொண்டிருந்தனர். காவலாள் மீண்டும் பேச்சைத் துவக்கினான்.

"தங்களின் துயரம் நான் அறியாததல்ல; வீரமணி எனக்கு நண்பர்" என்றான். "நண்பர்! உன் நண்பருக்காக என்ன பிரயாசை எடுத்துக்கொண்டாய்? நட்பின் இலட்சணம் என்ன? அவர்மீது அபாண்டம் சுமத்தப்பட்டபோது ஏன் வாய் பொத்திக் கிடந்தீர்கள்? ஒரு பேச்சுப் பேசினீர்களா? இப்போது அவர் எங்கு இருக்கிறாரோ? என்ன கதியோ? யார், அவர் விஷயமாக அக்கறை காட்டினார்கள்? உத்தமா! உன்மீது கோபிப்பதாக எண்ணாதே. என் மனக் கொதிப்பு என்னை இவ்வாறு பேசச் செய்தது. என் நிலையை நீ அறிந்து கொண்டதாகச் சொன்னாய். எனக்கு உதவி செய்வாயா? அவரன்றி நான் வாழ முடியாது. காஞ்சியிலே போய் தங்கிவிட நான் புறப்படவில்லை. இதே பிரயாணம், அவரைத் தேடுவதற்காகவே என்று மாறிவிட வேண்டும்; என்னை உன் தங்கையாகப் பாவித்து என்னுடன் நீயும் வா. இருவருமாகப் பல நாடுகளைச் சுற்றிப் பார்த்து அவரைக் கண்டுபிடிக்கலாம்" என்று நடனா கெஞ்சினாள். உத்தமன், அந்த யோசனையை மறுத்து எவ்வளவோ பேசிப் பார்த்தான். ஆனால் அவனுடைய வாதங்களெல்லாம், நடனாவின் விழியிலே புரண்டோடிய கண்ணீரால் கரைந்து போயின. அவனும், வீரமணியைத் தேடும் காரியத்திலே ஈடுபட இசைந்தான். ஆனந்தத்தால் நடனா, குதிரையின் முதுகைத் தட்டிக் கொடுத்தாள்.

• • •

"பலே! பேஷ்! சரியான சமர்த்தனடா நீ"

என்று, மலர்புரியிலே, அரண்மனைக் குருவாகவும் அரசியை ஆட்டிப் படைப்பவனாகவும் இருந்துவந்த சூத்ரதாரி, தன் முன், குத்துச்சண்டை, ஈட்டி எறிதல் வேல் விடுதல், அம்பு எய்தல். முதலிய வீர விளையாட்டைச் செய்து காட்டிய, வீரனைத்தட்டிக்கொடுத்தார். அந்த வீரன், முகமலர்ச்சியின்றிக், கைகளிலே படிந்திருந்த புழுதியைத் தட்டிக்கொண்டே நின்றான். இத்தகைய புகழ்ச்சியினால், பரிசுகளால், பூரிப்பு அடைய, அவன் என்ன, ஊர் சுற்றும் வஸ்தாதா? படைக்குத் தலைவன்; பரம்பரை வீரன்; எதிரிகள் கண்டு வியக்கும் ஏறு; மன்னர் மன்றத்தில் மதிப்புடன் திகழ்ந்த மணியாயிற்றே அவன், மலர்புரி எனும் சிற்றரசுக்குச் செல்லாக இருந்த ஒரு ஆரியனின், பரிசுக்கும் புகழ்ச்சியுரைக்கும் மகிழ்வானா? வீரமணியே மாறுவேடத்தில், மல்யுத்தக்காரனாக மலர்புரியில் வந்திருந்தான். அவனுடைய வீர விளையாட்டைக் கண்டு வியந்த ஆரியன் அவனைத் தனக்குப் பாதுகாவலனாக அமர்த்திக்கொள்ளத் தீர்மானித்துப் பேரம் பேசினான்.

“மல்லனே! இப்படி நீ ஊரூருக்குச் சுற்றிக் கிடப்பதைவிட, இந்த அரசில் ஊதியம் பெற்றுச் சமஸ்தான சேவகம் செய்யலாமே. சம்மதமா உனக்கு?”

“சந்தோஷம் தங்கள் சித்தம்போல் நடக்கிறேன்.”

“ஊதியம் என்ன வேண்டும் கேள்.”

“இதுவரை ஒருவரிடம் ஊதியம் பெற்று வழக்கமேயில்லை. ஆனால் ஊர் உழைப்பைத் தின்று வாழ்ந்ததுமில்லை.”

“அதுதான் யோக்கியனின் செயல். ஆனால்இங்கு, சமஸ்தான சேவகம், இழிவானதல்ல.”

“தங்களிடம் சேவை செய்வது தேவசேவைக்குச்சமானமன்றோ.”

“மெச்சினேன் உன்அறிவையும் ஆற்றலையும். இன்று முதல் நீ நம்மிடம் வேலைக்கமர்ந்து விடு. தனி விடுதியும் ஆட்களும் தருகிறேன். செலவு பற்றிகவலைப் படாதே. உன் திறமையைக் கொண்டு, ஒரு சிறு படை தயாரிக்க வேண்டும், தேவிசேனை என்ற பெயருடன்.”

தேவி சேனை! தேவிக்குச் சேனை வேண்டுமாம்! தேவிக்கா, இந்தத் திருப்பிரம்மத்துக்கா? தேவி, சகல லோகரட்சகி, ஜெகன்மாதா என்று கூறுகிறான்; அவள் கையிலேந்தியுள்ள சூலம், எத்தனையோ கொடியரின் உயிரைக் குடித்து, இரத்தக்கறை படிந்தது என்று பூஜிக்கிறான். தேவியின் திருவிழியிலே தீப்பொறி கிளம்பினால் திக்கெட்டும் தீக்கிரையாகும் என்று சிந்து பாடுகிறான். என்னைச்சேனை தயாரித்துக்கொடு—தேவி சேனை என்று கேட்கிறான். இந்த ஆரியனின் அந்தரங்க நோக்கத்தை, அரசியோ, மக்களோ அறிவதாகக் காணோம். எவ்வளவு செல்வாக்கு! மதயானைகளை அடக்கும் வீரர்கள் இவன் முன்மண்டியிடுகின்றனர், உடலில் தைத்த அம்பு ஒடிந்தாலும், எதிரியின் யானையின் தந்தத்தை ஒடிக்கும் வீரமிக்க போர் மரபினர் இவன்முன் ஆமைகளாகின்றனர். அம்பிகே என்று கூவுகின்றான். ஆயிரக்கணக்கான மக்கள் இவனடி வீழ்கின்றனர்.

வீரத்தைப் போற்றியது கண்டுள்ளேன்; புலவரைப் புகழ்வது கேட்டுள்ளேன். அழகை பூஜித்தது அறிவேன்; அரசனை அடுத்ததும் அறிந்ததே; ஆரியனை ஏன், எக்காரணம் பற்றி, நமது தமிழ் மக்கள் வாழ்த்தி வணங்குகின்றனர்; பொய்யுரை கேட்டுப் பூரிக்கின்றனர்; இப்புலியோ பசுத்தோல் போர்த்துக் கிடக்கிறது. யோகம் புரிவதாகக் கூறும் அவன் மனதிலே. எவ்வளவு சூது கொழுந்து விட்டெரிகிறது! மேலுலகைக் கண்டதாகக் கூறும் அவன் விழிகளிலே, பேராசை கூத்தாடுகிறது. ஆண்டவனிடம் அளவளாவுவதாகக் கூறும் அவன் நடை ராஜ நடையாகவன்றோ மாறுகிறது. கலிங்கக் கிழவன் குகையிற் கூறியது நடந்ததில் ஆச்சரியமில்லையே. மனிதனைத் தேவனென்று கூறி அரசியை மயக்கினான்; இது ஆச்சரியமா! இல்லாத, காணாத ஈரேழு பதினாலு லோகத்தை மக்கள் நம்பும்படிச்செய்துவிட்டானே! இனித் தன் அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டியோ, அல்லது அரசியை அடியோடு நீக்கிவிட்டு முடிதரிக்கவோ சூதுசெய்கிறான்.

அதற்கே தேவி சேனை திரட்டுகிறான். நன்று, நன்று, சேனை திரட்டுவேன், ஆனால் அது தேவி சேனையா அல்லது அரசியின் சேனையா என்பதை நான் பார்த்துக்கொள்கிறேன். நடனா! உன் நினைவுக்காக என் நெஞ்சம் குமுறுகிறதேயன்றி, இந்த ஆரியனின் சூதுக்கு நான் அஞ்சவில்லை என்று வீரமணி மலர் புரியில் எண்ணிக்கொண்டு தேவிசேனைக்குத் தக்க ஆட்களைத் திரட்டிப், பயிற்சி தந்துவந்தான். நாளுக்குநாள், இச்சேனை வளருவதையும், விதவித மான போர்ப்பயிற்சி பெற்று வருவதையுங் கண்டு ஆரியன் களித்தான். அவனுடைய கபடத்தை நன் கறிந்த வீரமணி, மிக நன்றாக நடித்தான். மெள்ள மெள்ள, ஆரியனின் முழு நம்பிக்கைக்குப் பாத்திர மானான். அடிக்கடி அவன், மணியிடம் ஆலோசனை கேட்கவுந் தொடங்கினான். ஆனால், ஆரியனுக்குக் கடைசிச் செயலில் இறங்கத் துணிவு பிறக்கவில்லை. மரத்தின் உச்சி ஏறி, மதுரமான கனியைத் தொட் டுப் பறிக்கும் நேரத்தில், வேலியருகே சந்தடி கேட்டுத் தோட்டக்காரன் வந்துவிட்டானோவென்று திடுக்கிடும் திருட்டுப்பயலின் மனோநிலையிலே ஆரியன் இருந்தான். அரசன்-மலர்புரி மன்னன்—என்ற பெயர் ஒன்றுதான் இல்லையேயொழியச் சகல அதிகாரமும் அவனிடமே இருந்தது. ஆனால், அந்தப் பெயர் மீது பேராவல் பிறந்தது. எவ்வளவு அதிகாரம் இருந்து என்ன பிரயோசனம்? அரசு. என் சொற்படி ஆடுகிறது என்றாலும் என்ன பலன்? முடி ஓர் முண்டையிடம் இருக்கிறது. ஜடைதானே எனக்கு முடி! இந்தக்காவியைக் களைத்துவிட்டு, அரச உடையுடன் நான் காட்சி தந்தால், என் இனத்தவருக்கு எவ்வளவு மதிப்புப் பிறக்கும்? ஆனிரைகள் மேய்த்துக்கொண்டு வந்த ஆரியன் மனிதரை மேய்த்திடும் மன்னனானான் என்று பெருமை பிறக்குமே! கரடு முரடான நிலத்திலே, காயும் வெளியிலே, குன்றுகளின் இடையிலே, தத்தளித்த நமது கூட்டம் குளிர்ந்த கங்கையில் மூழ்கி, வாழ்வு வளம் பெற்றுவிட்டனர். பல மண்ட லங்களிலும் இன்று புகுந்து சிறிது சிறிது செல்வாக் கும் கண்டனர். ஆனால்! அரசு என்றால், அது அலாதியான ஆனந்தமே தரும். இனத்தின் எதிர் காலத்தைச் சிறப்புடையதாக்கலாம். இந்த மலர் புரிக்கு நான் மன்னனாகிவிட்டால், எந்த மண்ட லத்திலும் நம் இனத்தவருக்கு இடம் கிடைக்கும். ஏன்! சிலகாலம் சென்றபிறகு இந்த இடமே ஆரிய நாடாகியும்விடலாம். ஆலய அதிகாரி அரசியின் அதிகாரம்பெறுவது ஆகாதகாரியமா! வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம், ஓர் நல்ல சந்தர்ப்பத்தைப் பார்த்து அரசியை ஒழித்துவிடவேண்டும். முடி பிறகு நம் காலடிகிடக்கும். வேளை—சரியான வேளை வரவேண் டும். மணி வீரன், திறமைசாலி. ஆனால் அவனுக்கு "பக்தி" ஏற்படவில்லை. என் கட்டளைகளை நிறை வேற்றுகிறானேயன்றி அவன் கண்களிலே, அந்தத் தாசத்தன்மை தோன்றவில்லை. அது ஏற்படாதவரை அவனை எப்படி நம்பமுடியும்? என்று ஆரியன் எண்ணினான். மலர்புரி அரசியோ, "தேவிசேனை"க் காகச் செலவுக்குப் பணந்தருவதை திருப்பணி என்றெண்ணி மகிழ்வதும், மீண்டும் தேவ தரிசன மும் சரசமும் கிடைக்குமோ என்று ஆரியனைக் கேட்பதுமாக இருந்தாளே அன்றி, சேனை தன்னை ஒழிக்கவே தயாரிக்கப்பட்டிருப் பதை அறியாள். ஆரியனின் மத வேடம் அரசி யைப் பரிபூரண மாக ஏமாற்றிவிட் டது.

வளரும்

மாநாட்டு ஊர்வலத்தில் தலைவர்கள்.

தாளவாடி தகராறு

வேற்று மொழி மாநிலம் எதிலேயும், அந்த மாநிலத்தின் மொழியை வீட்டு மொழியாகக் கொள்ளாதவர் உயர்தர உத்தியோகங்களிலே இருக்க முடியுமா?

இருக்க விட்டார்களா?

நாம் கேட்கவில்லை — சிலோன் "செய்தி" கேட்கிறது இப்படி!

தாளவாடி என்னும் பகுதி தமிழ் நாட்டில்-கோவை மாவட்டத்தில் உள்ளது. இந்தப் பகுதியில் தமிழ்மொழி பேசுவோரும் கன்னடம் பேசுவோரும் கலந்தே வாழ்கின்றனர்.

தாளவாடிக் கன்னடர்கள் தாங்கள் அப்பட்டமான தமிழர்கள் அல்லவென்று நினைக்கலாம்; அப்படியே அவர்கள் அப்பட்டமான கன்னடர்களுமல்லர், 'இரு மொழி' யினரே. இந்த உண்மையை மறந்து தாளவாடிக் கன்னடர்கள், தாங்கள் வாழும் பகுதியைக் கன்னட மைசூர் மாநிலத்தில் சேர்க்கக்கோரி கிளர்ச்சி நடத்துகின்றனர். மைசூர் மாநிலத்தவரும் அதற்கு ஆதரவளிக்கின்றனர்!

ஜனவரி 28ல் தாளவாடி மீது படையெடுத்திருக்கின்றனர் மைசூர் மாநிலத்தவர்! இந்தப் படையெடுப்புக்கு மைசூர் மாநில எம். எல். ஏ. ஒருவர் தலைமை வகித்திருக்கிறார். படை எடுப்பாளர் நோக்கம் தாளவாடிப் பஞ்சாயத்து யூனியனைக் கைப்பற்றுவதாம், மைசூர் எம். எல். ஏ. திரு. விட்டல் நாகராசன் தலைமையில் 500 பேர் கொண்ட மைசூர்க்காரர்கள் தடையை மீறி, தாளவாடியில் பிரவேசிக்க முயன்றதால் தமிழ் நாட்டுப் போலீசார் அவர்களைக் கைது செய்துள்ளனர்.

தமிழகத்திலே மொழிவழி சிறுபான்மையினர், ஒரு துன்பமும் அடையவில்லை என்பதை மைசூர் உணரவில்லை போலும்.

தமிழ் நாட்டு சட்டமன்றத்திலே எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் திரு. பி. கருத்திருமன் கன்னடர் தான்! அவர் அடிக்கடி 'நான் கன்னடன்' என்று சட்டப் பேரவையிலே சொல்லிக்கொள்கிறார். இப்படி, மைசூர் மாநிலசட்டப் பேரவையிலே தமிழர் ஒருவர். எதிர்க்கட்சித் தலைவராக வரமுடியுமா? தவறி வந்துவிட்டாலும், நிலைத்திருக்க விடுவார்களா?

தமிழ் நாட்டு சட்டப் பேரவையில் இரண்டாவது எதிர்க்கட்சியிலே முதல்தரமான செல்வாக்கு பெற்றிருக்கிற டாக்டர் ஹண்டே, கன்னடர்தான்! அவர். மொழிப் பிரச்னை மீது பேசினாலே, தமிழ் மொழி ஆட்சிமொழியாவதை—கல்லூரிகளில் பயிற்சி மொழியாவதை எதிர்த்துதான் பேசுகிறார்! அப்படி ஒரு தமிழர் மைசூர் மாநில சட்டப் பேரவையில் செல்வாக்குப் பெற முடியுமா? முடிந்தாலும், கன்னட மொழிக்கு எதிராகப் பேச கன்னடர்கள் விடுவார்களா?

சென்னை மாநகராட்சியிலே ஆணையர் (கமிஷனர்) பதவிலிருக்கும் திரு. ஷெட்டி என்பவர் தமிழரல்லர்; கன்னடர்தான்!

தமிழ் நாட்டில் அட்வகேட் ஜெனரல் பதவியிலிருப்பவர் தமிழரல்லர்; மலையாளியான தமிழ் பேசவுந் தெரியாத கோவிந்தசாமிநாதன் ஆவார். இப்படி, கேரள மாநிலத்திலே ஒரு தமிழருக்கு அட்வகேட் ஜெனரல் பதவி கொடுப்பார்களா கேரளர்கள்?

தமிழ் நாட்டுக்கு சுயாட்சி கோர நியமிக்கப்பட்ட மாநில சுயாட்சிக் கமிஷனிலே, மூன்று அங்கத்தினர்களில், இருவர் ஆந்திரர்! அவர்களிலே ஒரு ஆந்திரர் கமிஷனின் தலைவர்! இப்படி, ஆந்திர அரசிலே தமிழருக்கு சிறப்புக் கிடைக்குமா?

ஏன்? தகராறு நடக்கும் தாளவாடியைத் தன்னகத்தே கொண்ட கோவை மாவட்டத்திலே கலெக்டராக இருக்கும் பாங்கோ என்பவர், தமிழரல்லர்; பஞ்சாபி சீக்கியர், இப்படி சீக்கியரொருவர் ஆந்திரத்திலோ, கன்னடத்திலோ மாவட்ட கலெக்டர் பதவியில் இருப்பதாகச் சொல்லமுடியுமா?

தமிழ் நாட்டு உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. வீராசாமி அவர்கள் தெலுங்கை வீட்டுமொழியாகக் கொண்டவர்தானே?

தமிழக பொது சுகாதாரத்துறை இயக்குநராக உள்ள செல்வி மரைக்காயர், பிறப்பால் மலையாளிதானே?

மருத்துவக் கல்வித்துறை இயக்குநர் திரு. ஏ. என். கே. மேனன் அவர்கள் அப்பட்டமான மலையாளிதானே? இன்னும் 14 மாவட்டங்களின் கலெக்டர்களிலே சுமார் 7-பேர் வேற்று மொழியை வீட்டு மொழியாகக் கொண்டவர்தான்.

இப்படி, வேறுமொழி மாநிலம் எதிலேயும் — அந்த மாநிலத்தின் மொழியை வீட்டு மொழியாகக் கொள்ளாதவர் — உயர்தர உத்தியோகங்களிலே இருக்க முடியுமா? இருக்கவிட்டார்களா? தமிழகத்தின் பண்பு பாருங்கள், எத்தன்மையான தொன்று!

தமிழகத்தில் தற்போதுள்ள ஆட்சி, திராவிடர் என்ற உணர்வை நீண்ட நெடுங்காலமாக வளர்ந்து வந்தவர்களால்நடத்தப்படுகின்றது. அதனால், ஆந்திர—கன்னட—கேரள மாநிலங்களிடமும் அதற்குப் பாசமுண்டு. பாசமில்லாவிட்டாலும், பகை இருக்காது. ஆகவே, தமிழ் நாட்டிலுள்ள மொழிவழி சிறுபான்மையினர் தி. மு. க. அரசிலே வாழ்க்கை வசதிகளைக் கோரிப் பெறலாம். ஆனால் அண்டையில் உள்ள மாநிலங்கள் நிலம் கோரிப்பெறுவது சாத்தியமில்லை. அந்த வீண் ஆசையை விட்டுவிடவேண்டும்.

★

பிறப்பினாலேயே ஒரு மனிதன் தாழ்ந்தவன் எனக் கருதி, அவனைக் கோயில் முதலானவற்றுக்குள் செல்லக் கூடாதெனத் தடுத்துவிட்டு, குறைந்த கூலிக்கு அவன் உழைப்பை உறிஞ்சி—மனிதர்கள் யாவரும் சமதர்மம், இம்மையிலும் மறுமையிலும் இன்பம் கிடைக்கும் உனக்கு என்று இதோபதேசம் செய்துவிட்டால்போதுமா? அவன் அடங்கத்தான் செய்வானா?

—நார்மன் கிளிவ்

மலரும் மாணவர்

பேரறிஞர் அண்ணா

மாணவ உலகின் மனப்பாங்கு, காலக்கண்ணாடி, இனஎழுச்சியின் எழில்மிகுசித்திரம் உரிமைப் போர் முரசொலி, விடுதலை விருத்தம், என்பதுபற்றி, யாரே அறியாதார்! வாழ்க்கை எனும் பொய்கையிலே, ஆரிய நச்சு கலக்கப் படாத பருவம். பகுத்தறிவு எனும் பகலவன் ஒளிபட்டு, விஷக்கிருமிகளை ஒழித்திடும்பருவம், குடும்பம் எனும் கோல்கொண்டு துழாவி, சேற்றைமேலுக்குத்தள்ளி, நீரைப் பாழாக்காப் பருவம், சுயநலமும், சுகபோகப் பித்தும் எருமையெனப் புகுந்து இருதய கமலத்தைத் துவைத்துப் பாழ் செய்யாப் பருவம், சந்தனக்காட்டைக் கடந்து, மணமும் குளிர்ச்சியும் மருவி மக்களை மகிழ்விக்கும் தென்றல்போல, சுருதியும் தாளமும் அமைந்து, சொற்சுவையும் பொருட்சுவையும் கேட்போருக்குக் களிப்பூட்டுவதோடு கருத்தூட்டும் இசைபோல, உள்ளது மாணவப் பருவம். ஏடுகளிலே நாடுபல கண்டு, வீடுபெறக் காடு செலும் வீணர்போலன்றி, பிறந்த பீடம் தமிழகத்தின் தனிப் பண்பு தெரிந்து, மகிழ்ந்து, உலகுக்கு அதனை உரைத்து உவகை மிகுந்து "தாயின்மேல் ஆணை, தந்தைமேல் ஆணை தமிழகமேல் ஆணை, தூய என் தமிழ் மேல் ஆணையிட்டே நான் தோழரே உரைக்கின்றேன்" என்று உள்ளத்திலே ஊறிடும் உணர்ச்சியினை அறிவிக்கும் ஆற்றல் மிககது மாணவப் பருவம்.

மாயா வாதமும் மன மருட்சியும், நெருங்க நடுங்கும் நிலையது! புராணமும் புல்லர் மொழியும் புகப் பயப்படும் அகம் அது! பதவியும் படாடோபமும், பத்து காதத்தில் நிற்கும், அந்தப் பண்பிலே திளைத்து அன்பிலே மிகுந்து, ஆர்வத்திலே குளித்து, ஆற்றலிலே சிறந்து, காணக் காட்சியாய், கேட்கக் கீதமாய்' விளங்கும் வாலிப வீரர்கள் முன்பு! வெட்டிப் பேச்சைத் தட்டி நடக்கும் தீரர்கள், கைகொட்டி நகைத்து, மட்டித்தனத்தை மட்டந்தட்டும் மாவீரர்கள், சுலோகங்களால் சுகவாழ்வு நடத்தும் சுயநலமிகளைச் "சுருட்டிக்கொள் உன் சூதை" என்றுரைக்கும் சூரர்கள் மாணவர்கள், அடிமைத்தனம், இருத்தலைக் கண்டால் அவர்களின் விழி கனல்கக்கும், உள்ளம் ஓராயிரம் எண்ணங்களை வெளியே தள்ளும், உணர்ச்சியின் உருவமாகிவிடுவர், உரிமை உரிமை என்று உரைப்பர். அந்த நடமாடும் எஃகுக் கம்பிகள், நாட்டு விடுதலைப் போருக்கேற்ற நல்ல தம்பிகள்! பாடுபட்டு உழைத்துப் பலன்காணு மக்களைக் கண்டால், கண்களிலே நீர் சோரும், கரங்கள் உதவி செய்ய முன்வரும், சிரங்கள் சோகத்தால் அசையும், சிந்தனை சமதர்மத்தில் சென்று பதியும், மாணவர்கட்கு, இத்தகைய மாண்புடைய மாணவமணிகளே, அறியாமை எனும் அந்தகாரத்தால் சூழப்பட்டுள்ள தமிழகத்திலே தூங்கா விளக்குகள்! மேலுலகத் தரகர்களென மேனி மெருகு கெடாது வாழவழி செய்துகொண்டு, இளித்தவாயரை ஏய்த்துப் பிழைக்கும் இனத்தினை இனி ஆதிக்கத்தில் இருக்க விடோம், என இடி முழக்கம் போல் இயம்பிடும், இடுக்கணுக் கஞ்சா இளஞ் சிங்கங்கள் மாணவர்கள்! இனத்துக்கு இவர்களே ஈட்டி முனைகள்! சனாதனத்தை அழிக்கும் சுரங்க வெடிகள்! சாஸ்திரமெனும் சப்மெரைனைத் தகர்த்தெறியும் டார்ப்பிடோக்கள்! வைதீகபுரிமீது பகுத்தறிவுக்குண்டுகளை வீசும் வீர விமானிகள்! சமதர்மபுரிக்கு மக்களை வெற்றிகரமாக அழைத்துச் செல்லும் முன்னணிப் படை! யுகயுகமாகக் கட்டி, அவ்வப்

திருச்சி மாநாட்டு மேடையில் தலைவர்கள்.

மாணவர் சமுதாயம் பூத்துக் காய்த்துக் கனிந்து மணம்பரப்பிக் கொண்டிருக்கிறது இன்று!
பழுத்தமரம் அந்தச் சமுதாயம்!
கல்லடி ஏராளமாக விழத் தொடங்கி இருக்கிறது.
கனி பறிக்க வேண்டியவர்கள் யார்?
காமராசரா?
மாணவர்கள் சிந்திக்க வேண்டாமா?

பொழுது பழுதுபார்க்கப்பட்டுப் பலப்படுத்தப்பட்ட பார்ப்பனியக் கோட்டைகளைப் படுசூரணமாக்கும் டாங்கிப் படை. ஆம்! மானத்தை மீட்கும் போரிலே, மாணவரன்றி வேறு யார், செயலாற்றும் திறம் படைத்தவர்கள்! அவர்களுக் கன்றிப் பிறருக்கு ஏது, அந்த உரிமை! அவர்களாலன்றி வேறு யாரால் சாதிக்க முடியும், அந்த மகத்தான வேலையை!! அவர்களையன்றி, வேறு யாரை நம்பி, விடுதலை இயக்கம் துவக்கப்பட்டிருக்கிறது, வீட்டிலுள்ள பேழையிலே விலையுயர்ந்த நவரத்தினத்தைக் குவிக்க வேண்டுமென்று எண்ணுபவர். இதற்கு இலாயக்கா? இல்லையே! வறுமை வளர வளர, இத்தகையோரின் பேழை நிறையும், ஆனல் வறுமை வளர வளர. பேழைகளை உடைத்தெறியும் கோபப் பித்தர் கூட்டமும் வளரும். எனவே. பேழையுடையோர் கோழையராகி எந்த நேரத்தில் என்னவிதமான ஆபத்து வருமோ என்று நினைத்து. உடல் வியர்த்து. நடமாடும் பிணமாகி நலிவர். அவரால் என்ன காரியத்தைச் சாதிக்க முடியும். பதவி! பதவி! மேலும் மேலும் பதவி! என்று காவடி தூக்கிடுவோரால் என்ன செய்ய முடியும்? கிடைத்ததைக் காப்பாற்றிக் கொள்ள கெஞ்சி கூத்தாடவும் மேலாம் பதவி பெற மண்டியிடவும் துரைமார் முன் தூபமிட்டுத் தாண்டவமாடவும் அதட்டிப் பேசுவோருக்குச் சிந்து பாடவும் அடுத்துக்கெடுப்போருக்கு ஆசாபாசமறிந்து ஆகுதி தரவும் நேரமிருக்குமே தவிர நாடு, இனம் எனும் சொல்லைநினைக்க

வரவேற்பு முகப்புகளில் ஒன்று.

நேரம் எங்கிருந்து கிடைக்கும்!

பணமும் பதவியும் குறிக்கோளாகக் கொண்டுவிட்டால் பணி புரியும் பண்பு பிறக்காது! மாணவரே, புறக் காட்சியிலே காணும் புண்போக்கத் தமது அகத்திலே அருவிபோலாடும் ஆர்வமெனும் மருந்தெடுத்திட முடியும். எனவேதான் அம்மாணவர்களின் மன எழுச்சியைக் காண நமக்கு மகிழ்ச்சி-மட்டற்ற மகிழ்ச்சி பிறக்கிறது. இருள் நீங்கும் மருள் மடியும்! தீது தொலையும், அடிமைத்தனம் அகலும், புதுவாழ்வு பிறக்கும், பொன் மலர் மணம் பெறும், என்ற நம்பிக்கை பிறக்கிறது.

கள்ளன் வெள்ளை உள்ளங்கொண்டோரை, மெள்ள வேறுபக்கம் திருப்பிவிட்டுக் கிடைத்ததைச் சுருட்டிக் கொண்டு ஓடுதல்போல, இங்கு தர்மோபதேசம் பேசித் தரித்திரத்தை வளர்த்து, மந்திர உச்சாடனம் செய்து மதியீனத்தைத் தழைக்கச் செய்து, திருவிளையாட்லைப் புகன்று தீயத் திரைமறைவிலே நின்று பொருள் கவராடுதலை முறையாக்கிய கூட்டத்தினர் சமுதாயக் கொடுமை ஒரு புறமும், சாதிப் பூசல் பிறிதோர் புறமும், வைதீகம் ஒரு புறமும், வீணர்வாய் வேதாந்தம் வேறோர் புறமும் இருந்துகொண்டு வீரரைக் கோழைகளாக்கி, கலையை வலையாக்கி மக்கள் வாழ்வை வழுக்கு நிலமாக்கி கோபுரத்தைக் குட்டிச் சுவராக்கி, தொங்கு வயிறை ஆதரித்துத் துவளும் உடலை நிராகரித்து, நிந்திப்போருக்கு வந்தனை புரிந்து கொடுமையை தூவி

மடமையை நீர்பாய்ச்சி, அறிவிலித்தனம் விளைந்திடும் அறுத்தெடுத்து அதனை ஆங்கிலேயனிடம் காட்ட அவன், "ஆஹா! நன்று நன்று! இந்நிலை இங்குள்ள மட்டும் எனக்கொரு குறையுமில்லை" என்று கூறிடக் கேட்டுக் கூத்தாடுவார்கள். இதனை மறைத்து மாணவர் உலகை, வெள்ளையர் மீது ஏவி விட்டனர் ஒரு சாரார். வெப்பமிகுதியால் வெடித்துள்ள நிலத்திலே புது வெள்ளம் வேகமாகப் புகுவதுபோல நயவஞ்சகரின் சொல், மாணவர் மனதிலே புகுந்து, அதன் பயனை, அக்கூட்டம் பெற்றுக்கொழுத்தது. மாணவர் உலகம் உழைத்து அலுத்தது!

இன்று! "நன்று, நன்று நமது நாடகம் இனி நடவாது" என்று அந்த நயவஞ்சகக் கூட்டம், கூறும். திராவிட மாணவர்களன்றோ கூடினர்!

இனத்தின் இன்றைய இழி நிலைக்கு அவர்கள் காரணம் கேட்கின்றனர். இழிவையும் பழியையும் துடைத்துப் புதுச்சித்திரம் வரைய அவர்கள் தீட்டுக் கோலுடன் நிற்கின்றனர். உரோம்வரை சென்று வாணிபும் நடாத்திய இனம், இன்று ஏன், பணியாளர்களின் பணியாளாகி விட்டது என்று கேட்கின்றனர்! பழமுதிர்ச் சோலையாம் தமிழகம், ஏன் இன்று பயமிகு படுகுழியாகி விட்டது என்று கேட்கின்றனர். நாடாண்ட மக்கள் இன்று நாடோடிகளான காரணம் என்னவென்று கேட்கின்றனர். வளமிகுந்த நாட்டிலே வறுமை மிகுந்ததேன் என்று கேட்கின்றனர். வீரம் செறிந்த நாட்டிலே இன்று வீணர் புகுந்தது எப்படி என்று கேட்கின்றனர். இமயத்திலே வெற்றிக்கொடி நாட்டிய இனத்தினர், இன்று ஏங்கிக் கிடப்பானேன் என்று கேட்கின்றனர். எங்கே திராவிடரின் வரலாறு? எங்கே திராவிட வீரம்? என்னவாயிற்று திராவிட இன ஒழுக்கம்? ஏன் ஆரியக் கற்பனைகள் மதமாகக் கலையாக நடமாடுகின்றன? ஏன் ஜாதி என்ற சொல்லறியா பூமியில், ஆயிரமுண்டிங்கு ஜாதி என்று கூற வேண்டி வந்தது? யார் இந்தக் கேவல நிலைக்குக் கொடுமைக்கு, மடமைக்குக் காரணம் என்று கேட்கின்றனர்! மாணவர் மனதிலே, இக்கேள்வி எழுந்த தென்றல், அது சாமான்யமானது என்று அசட்டரும் கசடரும் தவிர மற்றையோர் கருதார். இக்கேள்விகளே. கொடுமைகளை ஒழிக்க உலகில் பல்வேறு இடங்களிலே தோன்றிய புரட்சிகளுக்கு, முன்னுரைகளாக இருந்தன என்பதை உலக வரலாற்றுரை தெரிந்தோர் உணரமுடியும். "எங்கே என் வயல்?" என்று கேட்கிறான் ஒரு வீரன்; ஒரு குப்பை மேட்டினைக் காட்டுகின்றனர். 'எங்கே என் சோலை?' என்று கேட்கிறான். முட்புதர்கள் செறிந்த இடத்தைக் காட்டுகின்றனர். "என் மாளிகை?" என்று கேட்கிறான். சரிந்துபோன சுவரும், நொறுங்கிப்போன கூரையும் காட்டப் படுகிறது. "என் பேழை?" என்று கேட்கிறான், கை விரிக்கின்றனர், இல்லை என்பதற்கு அறிகுறியாக. 'ஆஹா!' இப்படியா நேரிட்டுவிட்டது? இவ்வளவு அவதியிலே சிக்கி என் அன்னை என்ன கஷ்டமனுபவிக்கிறாரோ' என்று கதறுகிறான் காளை. "எங்கே என் அன்னை என்று கேட்கிறான். தலைவிரிகோலமாகத் தள்ளாடி நடந்து, கையில் பிச்சைப் பாத்திரமேந்திய கிழவியைக் காட்டுகிறார்கள்! என்ன செய்வான் வீரன்!!

திராவிட மாணவர்கள், தமது நாட்டுப் பண்டைய நிலைமையை அறிந்தார்கள், இன்றைய நிலையைத் தெரிந்தார்கள். அவர்களின் மனம், நாம் மேலே கூறிய வீரனுடைய மனம் போலன்றி வேறெப்படி இருந்திருக்க முடியும்! "எவனால் என் மனைவிக்கும் தாய்க்கும் இந்நிலை ஏற்பட்டது" என்று வீரன் கேட்காதிருக்க முடியுமா? திராவிட மாணவர்களும் இதுபோலவே, எமது தரணி தாழ்ச்சியுற்றதன் காரணம் என்ன? எவரால் தாழ்ச்சியுற்றது? என்று கேட்காதிருக்க முடியுமா? என்ன பதில் கிடைத்திருக்க முடியும்? ஆரியம் அழித்தது, உன் அழகிய நாட்டை, அறிவு மலர்ந்த நாட்டை, கவிதை கூத்தாடிய நாட்டை, பொன்னும் மணியும் கொழித்திருந்த நாட்டை, என்பதன்றி வேறென்ன காரணம் காட்டமுடியும்!!

திராவிட மாணவர்களே! நீண்ட நாட்கள் கழிந்து, நாட்டுப் பற்றும் இனப்பற்றும் பூத்திருக்கிறது. இது சொற்பொழிவுச் சோலையாக மட்டும் நின்றுவிடக் கூடாது. கற்பனைப் பூங்காவிலே உலவ முடியாது! இன எழுச்சியைப் பரப்புங்கள். ஆரியத்தை அழிக்கும் ஆர்வத்தை வளருங்கள். சாதிபேதத்தைச் சாடுங்கள். வைதீகத்தை வீழ்த்துங்கள் கடவுள், மதம், புராணம், கலை, என்னும் பல்வேறு பகட்டான சதிகண்டு சளைக்காதீர், ஓய்வுகொண்டு உறங்காதீர், உங்கள் கரமே, புது உலகச் சிற்பம் சமைக்கவல்லது. இன்று நீங்கள் காணும் கோரக் காட்சியினைக் கண்டு மனம் நொந்து, மருந்து வகை பல தேடினர். ஒன்றும் பலிக்கவில்லை. ஒரே ஒரு மருந்து, கடைசீ மருந்து, நாட்டுப்பிரிவினை, என்பது. திராவிட நாடு திராவிடருக்கே என்பதன்றி, வேறோர் மருந்தில்லை. இதனை உணருங்கள், உறுதி கொள்ளுங்கள். உற்சாகத்தோடு உழைக்க வாருங்கள். வெற்றி நமதே !(5—3—44 திராவிட நாடு ஏட்டில்)

★

இனிக்குதடா!

—கு. பிரான்சிஸ்.

நெஞ்சமெல்லாம் இனிக்குதடா! நினைக்குந் தோறும்
நினைவெல்லாம் துள்ளுதடா, ஆனந் தத்தால்!
கொஞ்சுமுலா அதையெடுத்துக் கொண்டு பாட
குருதியெலாம் துடிக்குதடா! தமிழர்க்(கு) இன்பம்!
பாவேந்தர் பரவசத்தைப் பகிர்ந்து கொண்டு
பாரினிலே மகிழ்வெய்த நம்மில் இல்லை!
கோவேந்தர் கொண்டாடும் தமிழ்த்தாய் பெற்ற
கொஞ்சுதமிழ்ப் புலவன்புகழ் வாழி! வாழி!
பானிலவும், அவன்கீதக் குயில்கள், ஓடை,
பைம்பொழிலும் மகிழ்வாலே ஆடும் நன்னாள்!
மானிடரின் மனமென்னும் கவிதைச் சோலை
வரவேற்று மகிழ்ந்துபுகழ்ச் சூடும் பொன்னாள்!
சிந்திவரும் அந்திஎழில், சொட்டச் சொட்டத்
தேன்வழியும் மலர்க்கூட்டம், இதயத் துள்ளே
முந்தியுறும் நினைவுகளும், கவிதைப் பெண்ணும்
மோகனமாய்ப் புகழ்பாடிக் களிக்கும் நாளாம்!
பிசிராந்தை யாரின்று கவிஞ ராலே
பெரும்புகழைப் பெற்றாரே! ஆனால் அன்று
பசியேந்தும் புலவருக்குப் பரிசொன் றில்லை!
பாரிலவர் சென்றதன்பின் பரிசாம்! என்னே?

கண்ணீரின் கேள்வி

—அரிமதி தென்னகன்

கூடலூருக்கு நான் புதியவனல்லன் என்றாலும் ஓட்டலில் 'ரூம்' எடுத்துக்கொண்டு தங்குவது இது தான் முதல்முறை பதினைந்து நாட்கள் தொடர்ந்து நான் கடலூரில் தங்கவேண்டியிருந்ததால். 'லாட்ஜில்' தங்குவதைத் தவிர வேறுவழி எனக்கு இல்லை.

மக்கள் நடமாட்டம் அதிகமாக இல்லாத ஒரு அமைதியான இடத்தில் தங்கவேண்டி இருந்ததால் தான், மர்மப் படங்களில் வரும் காட்டு மாளிகைபோன்ற இடத்தில் நான் தங்கினேன்.

கையில் ஒருசிறிய பெட்டி; அதனுள் சில மாற்றுடைகள், சில புத்தகங்கள்; தேவைக்கும் சற்று அதிகமான பணம்; அவ்வளவுதான்.

அறையினை வாடகைக்கு எடுத்து லாட்ஜின் உள்ளே நுழைந்தேன். இனந்தெரியாத ஒருவகையான பீதி என்னைத் தொடர்வதை உணர்ந்தேன்.

திடீர் திடீர் என்று சிலர் வருவதும், அவர்களைத் தேடி பலர் வருவதும், காரணமில்லாமல் பலர் வெளியே செல்வதும் என் உள்ளத்தில் பரபரப்பை ஏற்படுத்தின.

புதிய சூழ்நிலை; புதிய இடம்; எனவே தூக்கம் வரவில்லை, வெளியே வந்து நின்றேன். அந்த இரவிலும் சில அறைகளில் விளக்குகள் எறிந்துகொண்டிருந்தன, மெல்லிய குரலில் 'குசுமுசு'க்கும் சப்தம்!

என்ன செய்கிறார்கள்?

எதற்கிந்த முணகல்?

ஒரே குழப்பமாக இருந்தது. எப்போதோ படித்த துப்பறியும் கதைகள் திரைப்படமாகவே என்முன் நடமாடின.

இரவினை, பயங்கர இரவு என்று அழைப்பதன் உண்மையை அன்று தான் அறிந்தேன். அந்த நடு இரவிலும், யாரோ வருகிறார்கள்; யாரோ வெளியே போகிறார்கள்.

யார் இவர்கள்?

இந்த இரவில் எதற்கு வருகிறார்கள்? எங்கே போகிறார்கள்?

ஒட்டுக் கேட்க வேண்டும்போல் இருந்தது; தைரியமில்லை; எனவே, இருந்த இடத்திலிருந்தே உற்றுக் கேட்டேன்.

இரண்டொரு அறையிலிருந்து வளையல்களின் ஒலி கேட்டது.

உடல் முழுதும் ஒரே சிலிர்ப்பு.

இரவு நேரம்; அருகே வளையல்களின்சப்தம்; இதுபோதாதா? இந்த நினைவு ஒன்றே போதாதா? அதற்கு மேல் அங்கு என்னால் நிற்க முடியவில்லை.

எப்படியோ தூங்கியிருக்கிறேன். அந்தத் தூக்கத்திலும் எத்தனையோ வகையான கனவுகள்; கனவுகள் என்றுதானே சொன்னேன்; இனிய கனவுகள் என்றுசொல்லவில்லையே!

கனவிலே காதலி வந்திருந்தால் இனிய கனவு. கட்டிய மனைவி வந்திருந்தால் இன்பக் கனவு. சீச்சீ! நான் கண்ட கனவு இழிந்த கனவு தான்.

பகல் மணி பத்திருக்கும்; ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தேன், படித்துக்கொண்டிருந்தேனா? பொய்......பொய்; புரட்டிக் கொண்டிருந்தேன்!

நான் இருந்த அறைக் கதவு மூடப்படும் சப்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன்.

மின்சாரத்தை உடம்பில் பாய்ச்சி இருந்தாலும் அந்த அதிர்ச்சி இருக்காது.

'யார் நீங்.........' என் உதடுகள் ஒட்டிக்கொண்டன. 'ஓ, ஐ ஆம் சாரி' என்று சொல்லி, 'அறை மாறி வந்துவிட்டேன்' என்று அவள் சொல்வாள் என்று நினைத்தேன்.

அவளோ,

என்பக்கத்தில் வந்து உட்கார்ந்து விட்டாள்.

'எதுக்கு இங்கே வந்தே' என்று கேட்டேன். அவள் சிரித்தாள்; அந்தச்சிரிப்பு......! அந்தச்சிரிப்பு!! எத்தனையோ சாம்ராஜ்பங்களும், மணிமுடிகளும் சிங்காரிகளின் சிரிப்பில் சரிந்தன என்றார்களே, அந்தச் சிரிப்புதான் அது.

அவள் சிரிப்பு நிற்கவில்லை. 'எதுக்கு இங்கே வந்தே' என்று மறுமுறையும் கேட்டேன். அவளோ, தொடர்ந்து சிரித்தாள். அந்தச் சிரிப்பு, 'என்ன இது சின்னக் குழந்தையாட்டமா கேள்வி கேக்றீங்க?' என்று கேட்பதுபோல இருந்தது.

'போ வெளியே!'

அவ்வளவுதான், 'ஒட்டகம் கூடத் தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள்' என்பதுபோல, ஒயிலாக அவள் சாய்ந்து கொண்டாள்.

'வெளியே போறியா இல்லையா? போலீசுக்குப் போன் பண்ணனுமா?'

"இந்த காலத்து ஆம்பிள்ளையாவெதெரியவில்லையே; என்னமோ தேடிகிட்டு உள்ளே வந்திருக்கிறேனே, உள்ளே வந்து தாழ்ப்பாளையும் போட்டுவிட்டாளேன்னு, ஜாலியாஇருப்போம்னு இல்லாமே சரியான மரக்கட்டை!!"

வந்த வியாபாரத்தில் பெற்ற தோல்வியை அவள் முகம் காட்டினாலும், வாய் மட்டும் என்னைக் கேலிசெய்ய மறக்கவில்லை.

நல்லவேளை!!

'இந்தகாலத்து ஆம்பிள்ளையாவே தெரியலையே' என்று சொன்னாளே.

ஆம்பிள்ளையாவே தெரியலையேன்னு சொல்லாமல்விட்டாளே!!

அப்போதைக்கு எனக்கு அதுவே பெருமையாகப்பட்டது.

ஆனாலும்,

என் இதயத்தின் எங்கோ ஒரு மூலையில் ரத்தம் கசிவதையும் என்னால் உணரமுடிந்தது.

அவள் ஒரு பெண்; பெண்மையைத் தெய்வமாக மதிக்கும் நாட்டில் பிறந்தவள்; இந்த மண்ணின் சாரம் அவள் உடலில் எங்கேனும் ஒரு மூலையில் இருந்திருந்தால் இப்படி நடப்பாளா?

மலரைத்தேடி வண்டு செல்லும்; இது இயற்கை.

இங்கோ இயற்கை தடம் புரண்டது. வண்டுகளைத் தேடி மலர் செல்லுகிறது. இது என்ன கொடுமை!!

'நீ ஒரு ஆம்பிள்ளையா?' என்று கேட்டாவது தன்னை வியாரபாரப் பொருளாக்கிக்கொள்ளும் அளவிற்கு ஒரு பெண்ணா?

என் கண் கலங்கியது,

நான் ஏன் அவளுக்காக அழ வேண்டும்; நான் அவளுக்காக அழுதேனா; இப்படியும் ஒருபெண்ணா என்று நினைத்து அழுதேனா? சமுதாயத்துள் புரையோடிவிட்டக் கொடுமையை நினைத்து அழுதேனா?

எனக்கே அது புரியவில்லை.

மறுநாள்......

ஏறக்குறைய அதேநேரம் இருக்கும். கதவு தட்டப்பட்டது. கதவைத் திறந்தேன்; இரண்டு மணி நேரத்திற்கு முன்னால் என் நினைவுஓடியது.

தழையத் தழையப் பின்னிய சடையில் இரண்டொரு மலர்கள் விளையாட, முகத்தில் மஞ்சளும், பொட்டும் பரிமளிக்க, உடலையே கைத்தறிச் சேலை மூடியிருக்க, முழுக்க முழுக்கப் பட்டிக்காட்டுப் பெண்ணாக ஒருத்தி, கையில் பிள்ளையோடு; கணவன் முன்னேசெல்ல, அடக்க ஒடுக்கமாக, குனிந்ததலை நிமிராமல் இந்த லாட்ஜில் நுழைந்தாள்.

அப்போது நேற்று வந்தவளின் நினைவும் வந்தது. சீச்சி, அப்படிப் பட்டவளும் பிறந்த மண்ணில்தான், இப்படிப்பட்ட பெண் தெய்வங்களும் தோன்றுகிறார்கள் என்று பெருமைப் பட்டுக் கொண்டது என்நெஞ்சம்.

அதே நெஞ்சம் இப்போது நெருப்பாகியது. காலையில் பத்தினித் தெய்வமாக 'லாட்ஜில்' நுழைந்தவள் இப்போது பரத்தையாக இதோ என் பக்கத்தில் இருக்கிறாள்.

என் உடல் கூசியது!

சுற்றிவளைத்து நான் பேச விரும்பவில்லை.

"நீ...காலையில்..." நான் முடிக்கவில்லை.

"ஒரு ஆணோடு வந்தேன்"

"ஆண், கணவன் இல்லையா?" அசட்டுத்தனமான கேள்வியாக இப்போது படவில்லை.

"இல்லை.........மாமா அவர்கள்; உறவால் இல்லை; தொழிலால்" தெளிவாகவே அவள் பேசினாள்.

"தொழிலா......"

"ஏன் இப்படி ஆச்சரியப்படுகிறீர்கள்? கையிலே குழந்தையோடு வந்தேனே, அது தொழில் ரகசியம்; உங்களைப் போன்ற நல்லவர்களுக்குப் புரியாத மர்மம். கழுத்திலே இருக்கிற தாலி; எங்கள் தொழிலுக்கு இருக்கும் பாதுகாப்பு."

அவள் வாயிலிருந்து சொற்கள் சரளமாக வந்தன. நல்ல வேளை! சரசமான சொற்களால் என்னை நெருக்கடிக்குள்ளாக்காததால் நான் பிழைத்தேன்.

'குழந்தை கிடைக்கவில்லையென்றால்'?

'என்னையே மாதத்துக்கு முந்நூறு ரூபாய்க்குக் குத்தகை பேசி என்னைப் பெற்றவர்களிடமிருந்தே அழைத்து வந்தவருக்கு, குழந்தைதானா கிடைக்காது? அப்படியே கிடைக்கவில்லையென்றால், அழுக்கான கயிறு இருக்கும் கழுத்தில், கல்யாணப் பெண் கழுத்திலிருப்பது போல, புதிய கயிறு கிடக்கும்; அவ்வளவுதான்?

'இப்படி நடப்பதற்கு வெட்கமாக இல்லையா?'

"வெட்கமே இல்லை" அவள் சிரித்தாள்.

"அச்சமாக இல்லையா?" இந்தக் கேள்வியை நான் கேட்டே இருக்கக் கூடாதுதான்; வாய் தவறிக் கேட்டுவிட்டேன்.

"கள்ள நோட்டு அடிப்பவனுக்கு ஆரம்பத்தில் அச்சம்; அதுவே தொழிலானால், தப்பிக்கும் வழி அவனுக்குக் கலையாகி விடுகிறது; அது தான் எங்கள் நிலை; ஒன்று மட்டும் உறுதியாகக் கூறுவேன்; எங்களை எல்லோருமே வாயால் வெறுக்கலாம்; ஆனால், மனதால் விரும்புகின்றவர்களே அதிகம். அநேகம் பேருடைய மேக்கப் கலைக்கப்பட்ட' மனத்தை அறிந்தவன் நான். வேதவிற்பன்னர்களாக, வேதாந்த சீலர்களாக, ஒழுக்க நெறி பரப்பும் உத்தமர்களாக, ஏன்......வேசிகளையே ஒழிக்கவேண்டும் என்று வீரம் பேசுபவர்களாக வெளியே உலா வருபவர்கள், 'இந்த விஷயத்தில் எவன்தான் யோக்கியன்' என்று சொல்லிவிட்டு ஐந்து, பத்தை மறைப்பதற்கு லஞ்சமாகக் கூட்டிக் கொடுத்ததை இதே கரங்கள் எவ்வளவோ வாங்கியுள்ளன."

வரண்ட நெஞ்சை ஈரப்படுத்திக் கொள்ள எச்சிலை விழுங்கினாள். எனக்கோ, அழுவதா? சிரிப்பதா என்றே புரியவில்லை.

அவள் தொடர்ந்தாள்...

வயிறு இருப்பதால் பசிக்கிறது; மானம், பசிக்குச் சோறு போடவில்லை.

சோரம் போனால் சோறு கிடைக்கிறது என்பதைவிட, சோரம் போ, சோறு தருகிறேன் என்கிறார்கள். அவர்களிடம் இருப்பதைத் தருகிறார்கள்; எங்களிடம் இருப்பதை எடுத்துக் கொள்ளுகிறார்கள். இதுதான் எங்கள் வாழ்க்கை."

இதையெல்லாம் ஏன் அவள் என்னிடம் சொல்லுகிறாள் என்று எனக்குப் புரியவில்லை.

அவளே இதற்கும் பதில்தந்தாள்.

"நேற்று உங்களிடம் வந்தவள் உங்களைப் பற்றிச் சொல்லிவிட்டு போனாள்."

"அவள் எங்கே"

"காலை நாலு மணிக்குப் போய் விட்டாள், நானும் நாளை நாலு மணிக்குப் போய்விடுவேன். இன்றைக்கு இந்த மார்க்கெட்டு; நாளை வேறு மார்க்கெட்டு. இங்கே இன்று புதிய சரக்கு; நாளை அங்கு புத்தம் புதிய சரக்கு."

அவளுடைய வேதனை கலந்த சிரிப்பு 'யாரையோ' கேலி செய்வதாகப்பட்டது.

அவள் கண்களில் ஒரு புதிய ஒளி தோன்றியது; அவளின் உதடுகள் துடித்தன. நான் காரணம் புரியாமல் விழித்தேன்.

"ஏன் அப்படிப் பார்க்கிறீர்கள்? என்னைப் பார்த்தால் அசிங்கமாக இருக்கிறதா? தூய்மையான தரையில் மாடு சாணம் போடுகிறது. சாணத்தால் தரை அசிங்கமாகிறது. ஆனால், அசிங்கப்படுவதோ தரைதான் — என்னைப் போன்றவர்கள் நிலையும் அப்படித்தான்.

விட்டில் விளக்கைத் தேடி வருகிறது. விளக்கை அணைத்துவிட்டு ஓடிவிடும் விட்டில் பூச்சிகளும் உண்டு. விளக்கோடு சேர்ந்து செத்தொழியும் பூச்சிகளும் உண்டு.

ஆனாலும் விட்டிலின் சாவுக்கு விளக்கை மட்டுந்தான் குறை கூறுகிறது சமுதாயம்."

இப்படிச் சொல்லிவிட்டு அவள் எழுவதற்கும், வெளியே ஒரு குரல் இவளை அழைப்பதற்கும் சரியாக இருந்தது.

"மாமா என்னைக் கூப்பிடுகிறார்; எனக்கு ஒரு உதவி செய்யுங்க; இந்த பத்து ரூபாயை வச்சுக்குங்க ......"

"எனக்கு எதுக்கு......?"

கவலையை மறந்து அவள் சிரித்தாள்.

"பணத்தை உங்களுக்கே கொடுக்கவில்லை. இங்கே வருவதற்கு முன்னால் ஒரு கெழவரோட நான் இருந்தேன். அவருடைய மனங்கோணாமே நான் நடந்துகிட்டதால், எனக்குன்னு அவர் கொடுத்த 'பக்சிஷ்' இது. இது 'அவரு' கண்ணில் பட்டா' அடிதான் மிஞ்சும்; பணம் போயிடும், அப்படி ஓர் 'காண்ட்ராக்ட்' அதான், 'கண்டிஷன்!"

"ஏன் இதை நீயே மறைச்சி வச்சிக்க முடியாதா?"

''அவரு சந்தேகப் பட்டா வயித்துக்குள்ளேயே இருக்கான்னு பிளந்து கூடப் பார்ப்பாரு' எதையும் மறைக்கக்கூடாதுன்னு ஒப்பந்தம்; அதுக்குத்தான் மாசம் முந்நூறு...''

அவள் சொன்ன 'எதையும்' என் பதில் உள்ள அழுத்தம் என் நெஞ்சைப் பிளந்தது.

'இந்தாங்க இதை வச்சுக்கொள்ளுங்க; இப்படி ஏதாவது ஒன்னு ரெண்டுன்னு கெடைச்சா உங்ககிட்டே கொடுக்கறேன். காலையில் நாலுமணிக்கு 'அவரு' முன்னால் போவாரு, நான்பின்னால் போவேன். அந்த நேரமா பாத்து எங்கிட்டே கொடுங்க.'

அதுக்குமேல் அவள் நிற்கவில்லை. அறைக்கதவு பட்டுன்னு திறந்தேகிடந்தது; ஆனால் மனக் கதவு...?

இரவெல்லாம் நான் தூங்கவில்லை.

நான்கு மணிக்கு வெளியே வந்தேன்.

கையெடுத்துக் கும்பிடவேண்டும் போல் இருந்தது அவளை. அப்படி இருந்தது அவளுடைய புனிதமான காட்சி.

அந்தக் குளிரிலும் தலைமூழ்கி இருக்கிறாள். ஈரம் சொட்டச்சொட்ட தழையத்தழையப் பின்னிய சடை; மல்லிகைச்சரம்; உடலை மூடிய கைத்தறிச் சேலை; மங்கல நாண்; மஞ்சள் முகம்; குங்குமப் பொட்டு.

கையிலே குழந்தையோடு அவள் செல்லுகிறாள்; அவளுக்கு முன்னே அவன் போகிறான். அவள் கொடுத்த ஒரு நாள் 'பக்சிஷ்' ஐம்பது ரூபாயையும் ஒரு கவரில் போட்டுக் கொடுத்தேன்.

ஏதோ உணர்வு! அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தேன். அவள் கண்கள் கலங்கின. இரண்டு சொட்டுக் கண்ணீர் அட்க்கமாக சிந்தின.

அந்தக் கண்ணீர் என்னைப் பார்த்துக்கேட்ட கேள்வி. 'இவளைப் பற்றி என்ன நினைக்கிறாய்? இவளுக்காக ஒரு சொட்டுக் கண்ணீரைச் சிந்துவாயா?'' என்பதாக உணர்ந்தேன்.

ஆனால்......விடை...?

அதைச் சொல்ல நான் யார்?

8-ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த ஆண்டு வரையில்; இதுபோன்ற பட்ஜெட் அநீதிகளை மக்களுக்கு எடுத்துக் காட்ட வேண்டிய பொறுப்பு நமக்கும், சில எதிர்க்கட்சிகளுக்கும் மட்டுமே இருந்துவந்த நிலை மாறி, கூட நம் வாயை அடக்க வேண்டியவர்கள் எல்லாம்கூட, குடும்பச் சண்டை காரணமாக நம்மோடு சேர்ந்து அல்லவென்றாலும்கூட, நம் போலவே அல்லது நம்மினும் வலிய குரலில் இப்போது குறைகூற முன்வந்திருக்கிறார்கள்.

இவை யாவும் மதிக்கப்பட்டு, கெரசின், சர்க்கரை, மணியார்டர் உயர்வு போன்ற சிலவற்றிற்கேனும் விலக்களிக்க மத்திய அரசு முன்வர வேண்டும்.

இரயில்வே பட்ஜட்டில் மாற்றம் செய்யப்பட்டு மூன்றும் வகுப்புப் பயணிகளது கட்டண உயர்வையும் சில பொருள்கள் மீதான கட்டண உயர்வுகளையும் திரும்பப் பெற்றுக் கொண்டதுபோல், பாராட்டத்தக்க ஒரு நடைமுறையாக, பொதுப் பட்ஜெட்டில் கடைசித்தள மக்களது சுமையைக் குறைக்கும் வழி வகைகளை விரைவில் அறிவிக்க வேண்டும்.

அத்துடன், பல்லாண்டுக் காலமாக தமிழ் நாடு வலியுறுத்தி வரும் சேலம் உருக்காலை திட்டம் பற்றி வாய் மூடி மௌனம் சாதித்து விட்டது பட்ஜெட் என்றாலும், வெகுவிரைவில் இதற்கான தனி அறிவிப்பையாவது வெளியிட வேண்டும்.

★

★

திருச்சி மாநாட்டுக்கு வருகைதந்த பஞ்சாப் முதல்வர் குர்னம்சிங் அவர்களுடன் தமிழக முதல்வரும், கல்வி அமைச்சரும் கலந்துரையாடிடும் காட்சி.

★

?! வினா-விடை

எஸ். எஸ். முருகேசன், கார்கல்.
"காஞ்சி" தலையங்கப் பகுதியில், பேரறிஞர் அண்ணாவின் உருவத்தை, நிரந்தரமாகப் பதிப்பிப்பீர்களா?

இப்படியொரு யோசனை இரண்டொரு மாதங்களாகவே. காஞ்சிக்கு உண்டு. விரைவில் உங்கள் ஆசை நிறைவேறும்.

எம், சி. ரத்தினம், மாச்சம்பாளையம்.
பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்திருந்தால் காங்கிரசின் இப்போதைய நிலை கண்டு கண்ணீர் வடிப்பாரா? ஆறுதல் கூறுவாரா?

அறிஞர் அண்ணாவானாலும் சரி, வேறு யாராயிருந்தாலும் சரி, "காங்கிரஸ்" என்ற ஒரு அரசியல் நிறுவனத்தின் வாழ்வுக்காகவோ, தாழ்வுக்காகவோ, கண்ணீர் விடவோ, அன்றி ஆறுதல் கூறவோ தேவையில்லை. துணைக் கண்டத்தில் ஜனநாயகத்தின் ஆணி வேர் அற்றுவிடாமல் இருக்கும்படியான அரசியலை நடாத்தவேண்டிய கடமையை நிர்ப்பந்திக்கத்தான் முயல வேண்டும். அதனைத்தான் அண்ணாவும் செய்திருப்பார்கள்.

• • •

போ. மணிமாறன், உதகை.
மாநில சுயாட்சிக்காகப் பெரியதொரு போராட்டம் நடத்த வேண்டி வருமா?

மயிலிடம் போய் கெஞ்சிக் கேட்டால் இறகு கிடைத்துவிடுமா என்ன? அல்லது ஒரு பணமுதலையிடம்போய், லாபத்தில் பங்கு கொடு என்று கேட்டால், ஒழுங்காகக் கொடுத்துவிடுவானா?

• • •

கோயில் நிலங்களை எல்லாம், நிலமற்றோருக்குப் பகிர்ந்தளிக்கும் கழகத் திட்டம் என்ன ஆயிற்று?

முதலில், இதற்காக சமுதாயத்தைச் சரிப்படுத்தும் திட்டம் நிறைவேற்றப்பட்டாக வேண்டும். சமுதாயச் சிந்தனைகளைப் பற்றித் தெளிவுப்படுத்தி பிரசார மேற்கொள்ளப்பட வேண்டும். மக்கள் பகுதிகளின் கணிசமான பகுதியிலிருந்து, வலிவான குரல் உரத்துக் கேட்கச் செய்யவேண்டும். இல்லையென்ருல் காங்கிரசேகூட இதை எதிர்க்கும், சட்டம் ஒழுங்குச் சீர்குலைவைத் தோற்றுவிக்கும்.

டி. ரகுபதி, தேவகோட்டை
மைசூர்கவர்னர் தர்மவீரா, கண் தானமளித்தது எப்படி இருக்கிறது?

'கண்ணைக்கத்து இதயம்' என்பதைக் காட்டுவதாக இருக்கிறது!

மு. தங்கமணி, மன்னார்குடி
மேற்கு வங்கம் எப்படி இருக்கிறது?

கெரன்ஸ்கிய் காலத்து ருஷ்யா மாதிரி இருக்கிறது என்று கூறலாமா?

ஏ. சிங்காரம். விழுந்தமாவடி
ஜகஜீவன்ராம், கட்சித் தலைவரான பிறகும் மத்திய அமைச்சராக நீடிப்பது முறையா?

முறையா? முறையா? என்று கேட்க இந்திரா அரசிடம் ஆயிர மாயிரம் விவகாரங்களிருக்கின்றனவே!

எம். கே. சுந்தரம், சென்னை
இந்திரா அரசின் பட்ஜெட்டை எதிர்க்கும் சிண்டிகேட் காங்கிரஸ், இதுவரையில் அப்படி ஒரு எதிர்ப்பைக் காட்டி இருக்கிறதா?

பட்ஜெட்டை எதிர்த்துப் பேச வேண்டிய நிர்ப்பந்தம் இப்போதுதானே அவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. இந்த எதிர்ப்பாளர்கள்தானே இதுவரையில் வரி போட்டுக் கொண்டிருந்தார்கள்.

சி. துரைரத்தினம், வேதாரண்யம்
"கச்சத்தீவு" பிரச்னை என்ன ஆயிற்று? சிங்களா ஆக்கிரமிப்பு அதிகப்பட்டுக் கொண்டிருக்கிறதா?

ஆக்கிரமிப்பு மிருந்துகொண்டு இருப்பதாகத் தெரிகிறது. மத்திய அரசும், தமிழ் நாடும் தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், கைமாறிப் போவதைத் தடுக்க முடியாது.

கண்ணாயிரம், சென்னை.
தி. மு. க. - வின் வடநாட்டுத் தொடர்பை, "காவடி தூக்குதல்" என்று காங்கிரஸ் வருணிக்கிறதே—ஏற்றுக் கொள்ளலாமா?

தாராளமாக ஏற்றுக்கொள்ளுங்கள். காங்கிரஸ்காரர்கள்காவடி தூக்கிப்போய் இங்குள்ளதை வடக்கே கொட்டிவிட்டு வந்தார்கள். இப்போது தி. மு. க. காவடி தூக்கி, வடக்கே இருந்து கொண்டுவந்து தமிழ் நாட்டில் கொட்டுகிறது என்பதையும் அந்தக் காங்கிரஸ் காரர்களிடம் சொல்லுங்கள்.

ஜி. ராதா, செங்கற்பட்டு.
டிராக்டர்களுக்கு வரியை உயர்த்தி இருப்பதனால் விவசாயம் பாதிக்காதா?

பதினையாயிரம், இருபதாயிரம் என்று ரூபாய் கொடுத்து ஒரு டிராக்ட்டரை வாங்க முன்வருவோரால், வரி உயர்வு காரணமாக 100 அல்லது 200-ரூபாய் அதிகம் கொடுப்பதைத் தாங்க முடியாமல், தொழில் நசித்து விடக்கூடும் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

தமிழரசன், கோவை.
இப்போது எங்களது "தலைக்கனம்" குறைந்து விட்டது என்று காமராசர் பேசிஇருப்பது எதைக் குறிக்கிறது?

இதுவரையில், பதவிப் பொறுப்புகள் இருந்ததனால் தலைக்கனம் இருந்தது; இப்போது பதவி இல்லை. எனவே தலைக்கனமும் இல்லை என்பதைக் குறிப்பதுடன், இனியும் எங்களை ஆதரித்து, பதவிப் பொறுப்புக்கள் தந்து, தலைக்கனத்தை உண்டாக்கி விடாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிருர் என்பதையும் குறிக்கிறது.

பட்டிமன்றங்கள் பற்றி ஒரு பார்வை....!!

—புதுவையார்—

பாட்டரங்கங்களும், பட்டி மன்றங்களும் வளர்ந்துவரும் தமிழ் மறுமலர்ச்சிக்கு வழியமைத்துத் தருகின்றன என்பதை வயிற்றெரிச்சல்காரர்களைத் தவிர, மற்றவர்கள் அனைவருமே ஒப்புக்கொள்வர். சங்காலம் என்பதைப்போல, தற்காலத்தைப் பாட்டரங்கக்காலம், பட்டி மன்ற உலகம் என்று சொன்னால், அது மிகையாகாது.

ஒருபக்கம் அன்னைத் தமிழுக்கு வரும் இன்னல்களை அழித்துக் கொண்டே வரும் பணியில் கழகமும் கழக அரசும் ஈடுபட்டுக்கொண்டே வருகிறது. அதே வேளையில், தமிழின் வளர்ச்சிப் பணியிலும், மறுமலர்ச்சித் தொண்டிலும், உண்மையான 'மொழிப்பித்தர்கள்' ஈடுபட்டு வருங்காலமிது.

அந்த நல்ல உள்ளங்களின் ஆவலை நிறைவேற்றும் பணியில், பட்டிமன்றங்கள் துணைநின்று வருகின்றன.

ஆனால், இத்தகு பட்டி மன்றங்களைத் தமிழ்ப் பகைவர்களும், தமிழினத் துரோகிகளும், நாங்கள் தமிழர்கள் இல்லையா? என்று நடிப்போரும், தமிழின் வீழ்ச்சிக்குப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டனர் என்பதை இன்னும் நாடு அறிய வேண்டிய அளவிற்கு அறிந்துகொள்ளவில்லை.

தூயநெஞ்சினரால் நடத்தப்பெற்ற பட்டிமன்றங்கள் மக்களின் உள்ளங்களில் துடிப்பினை உருவாக்கிவிட்டன. எனவே, பட்டிமன்றம் என்று பார்த்தவுடனே, எதைப்பற்றியும் சிந்திக்காமல் கூடிவிடும் பழக்கம் மக்களிடை உருவாக்கிவிட்டது.

எனவே, மக்களை எப்படிக் கூட்டுவது என்பதற்கே மாநாட்டில் ஆய்வு நடத்தவேண்டிய அளவிற்கு மக்களிடம் ஆதரவு பெற்றவர்கள், எவராலோ உருவாக்கப்பட்ட சாதகத்தை, தங்களுடைய தேவைக்குப் பயன்படுத்திக் கொள்ளும் திட்டத்தோடு ஆங்காங்கே பட்டி மன்றங்களை ஏற்பாடுசெய்கின்றனர்.

இப்படி ஏற்பாடு செய்த பட்டி மன்றங்கள் மூலம், இதுவரை நாட்டு மக்களிடை 'செலாவணி'யாகாத கருத்துக்களையெல்லாம் 'ஏலம்' போட்டாவது விற்று வருகிறார்கள். எல்லோருமே ஏமாறுகிறார்கள் என்றில்லாவிட்டாலும், இரண்டொருவராவது ஏய்ப்பிற்கு ஆளாகி விடுகிறார்கள்.

'பாரதிக்குப் பிறகு கவிதை வளர்ந்துள்ளதா?' என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடத்துகிறார்கள் சிலர். ஆம் என்று சிலபேரைப் பேசவைப்பது; இல்லை என்று சிலரை முழங்கவைப்பது பாரதிக்குப்பின் வளர்ந்துள்ளது கவிதை என்று வாதாட ஏற்பாடு செய்யப்பட்டவர்கள் அத்தனை பேருமே சொத்தைகளாக இருப்பர்; பாரதிக்குபின் கவிதையாவது? வளர்ந்ததாவது? என்று முழங்குபவர்களின் ஆட்சி பட்டிமன்றத்தில் எங்கும் எதிரொலிக்கும். வளர்ந்துள்ளது என்று இழுத்துப்பறிக்கும் பேச்சாளர்களும் பாரதிக்குப்பிறகு கவிதை வளரவில்லையா? என்று கேட்டுக்கொண்டு, 'சுப்பு இல்லையா சீனு இல்லையா? சங்கு இல்லையா? வெங்கு இல்லையா? என்று எவன் பெயரையாவது சொல்லுவார்கள். தப்பித்தவறி யாரோ ஒரு 'அசடு.' பாரதிதாசனைவிடவா கவிஞன் வேண்டும் பாரதிக்கே பாட்டன் பாரதிதாசன் என்று சொல்லிவைக்கும்.

அவ்வளவுதான்!!

'பாரதிதாசனும் கவிஞனா? என்று கேள்வி பாவேந்தனை ஒருபிடிப் பிடிப்பார்கள்.

தலைவர் தீர்ப்பளிப்பார்; அவர்தான் என் செய்வார் பாவம்; ஏற்பாடு செய்யப்பட்டவராயிற்றே; பாரதிக்குப் பிறகு கவிதை வளரவில்லை என்று தீர்ப்பு அளிப்பார்; பாரதிதாசனைக் கவிஞன் இல்லை என்று நிலைநாட்டிவிட்டக் களிப்பு 'சிலது'களுக்கு நெஞ்சையடைத்துக் கொள்ளும்!!

இப்பணியில் அநேகமாகச் சில கலை இலக்கியப் பிண்டங்கள்தான் ஈடுபட்டுவருகின்றன.

இன்னும் சில 'தமிழபிமானிகள்' பட்டிமன்றம் நடத்துவார்கள்.

திருக்குறள் நீதி நூலா? இலக்கியமா?

எப்படிக்கதை?

நீதிநூல் இல்லையென்று நான்கு பேர் பேசுவார்கள். இலக்கியமே இல்லையென்று நான்கு பேர் பேசுவார்கள்.

தீர்ப்பு எப்படி இருந்தாலும் அவர்களுக்கு மகிழ்ச்சிதான்,

நீதி நூல்தான் என்று தீர்ப்பிருந்தால், திருக்குறள் இலக்கியம் இல்லை என்று நிலைநாட்டி விடலாம், இலக்கியம்தான் என்று தீர்ப்பிருந்தால் நீதி நூல் இல்லை என்று நிலைநாட்டி விடலாம்.

எப்படியோ. தீந்தமிழ்க்குச் சிறப்பளித்துக்கொண்டிருக்கும் திருக்குறளின் பெருமையை ஒழித்துக்கட்டும் பணியில் ஒரு பங்கு நிறைவேறிவிட்ட மகிழ்ச்சி அவர்களுக்கு மிஞ்சுகிறது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளை உதாரணங்களாக எடுத்துக் கொண்டாலும், உண்மை என்பதை மட்டும் மறந்துவிடக்கூடாது.

தமிழின் நோயை நீக்க நல்லவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட மருந்தை, அருந்தமிழ் அழிப்புக் பயன் படுத்துகிறவர்களின் போலி வேடங்களை நாடு புரிந்து கொள்ள வேண்டும்!!

ஒளியூட்ட ஏற்பட்ட விளக்கை, வீடுகளைத் தீக்கிரையாக்கும் வேலைகளுக்குப் பயன்படுத்தும் திருடர்களை இனங்கண்டு கொள்ளவேண்டும்!!

களையெடுக்க நல்லோர் கண்டுபிடித்த ஆயுதத்தைப், பயிரழிக்கப் பயன்படுத்தும் 'பாதித் தமிழர்களை' மக்கள் பரமசாதுக்களாக நினைக்கக் கூடாது.

மொழித்துறையைப் பொருத்தவரை பகைவர்கள் நண்பர்களைப் போல வருகிறார்கள்.

தமிழின் சிறப்பழிக்கும் பணியினைத் தமிழினைப் படித்தறிந்த புலவர்களே செய்கிறார்கள். தமிழ்ப் பேராசிரியர், விரிவுரையாளர்கள் ஆராய்ச்சி என்றபெயரால் தமிழுக்கு ஆழக்குழி தோண்டுகிறார்கள்.

காரணம் வேறல்ல;

தமிழ்ப்பகைவன் தமிழைப்படித்துவிட்டான். ஆராய்ச்சி என்ற பெயரால தன் ஆசையை நிறைவேற்றும் பணியில், தமிழ்ப் போர்வையே பாதுகாப்பாக இருக்க பயமின்றி செயற்படுகின்றான்.

இதைஉணர்ந்துதான், ஒருவேளை

"எப்பொருள் யார்யார்வாய்க்
கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என்று வள்ளுவன் சொன்னானோ?

புலவரே, புடலங்காயோ

(16-ம் பக்கம் பார்க்க)

கேட்டீரா! சேதி!

அது ஒரு பொன்னுள்!

தி. மு. க. ஆட்சிப் பொறுப் பேற்றுக் கொண்டது, தமிழுக்கு மகுடஞ் சூட்டியதற் கொப்பாகு மென்பது மிகையில்லை என்பதை மெய்ப்பிப்பதைப்போல, தமிழுக்கு ஏற்றந் தரும் எத்தனையோ பணிகளைச் செய்திருக்கிறது கழகஅரசு. இதுவரையில் ஆங்கிலத்தில் மட்டிலுமே பிரசுரிக்கப்பட்டு வந்த அரசிதழை, இனி தமிழிலேயே பிரசுரிப்பது பற்றி யோசித்துக் கொண்டிருப்பதாகவும், "கெஜட்" எனும் அதன் ஆங்கிலத் தலைப் பைக்கூட தமிழாக்கம் செய்து, தமிழ்ப் பெயரே சூட்டப்படும் என்றும், அச்சகத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் அறிவித்திருப்பது தித்திக்கும் ஒரு செய்தியாக செவியெலாம் இனிக்கிறது. இப்போது முக்கியமான சில பகுதிகள் மட்டுமே தமிழில் பிரசுரிககப்படுவதற்கு மாருக, இனி அரசிதழ முழுவதுமே தமிழாக இருக்கப்போகும் அந்தப் பொன்னுளை ஆவலுடன் எதிர் பார்க்கலாம்!

சந்திர உலகு போனுலும்...

இந்தி வெறி பிடித்து கோரத் தாண்டவமாடிக் கொண்டிருப்போர், இந்தி நூல் ஒன்றுக்கே தடை விதித்து, பறி முதல் செய்யும்படி உத்திரவும் இட்டிருக்கிருர்கள் என்ருல், அந்த வெறியர்களது இதயத்தை, இந்தியைவிட; "இந்து மதம்" எநத அளவுக்கு நிரப்பிக் கொண்டிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது! தந்தை பெரியார் அவர்களால் எழுதப்பட்ட நூல் ஒன்றை இந்தியில் மொழி பெயர்த்து, "சச்சி ராமாயண்" என்ற மகுடத்தோடு டெல்லியில் வெளியிட்டிருக்கிருர்கள்! இராமக் காதை பற்றிய புரட்டுக்களைப் புட்டுப் புட்டுக் காட்டுகிறதென்ற காரணத்தால், "இந்துக்களின் மனம்" புண்படுகிறதாம்! அதனுல் தடை செய்துவிட்டார்களாம்! இதேபோல் அண்மையில் உ. பி. அரசும் இந்நூலுக்குத் தடைவிதித்திருக்கிறது. இதிலிருந்து நம்மால் புரிந்துகொள்ள முடிவதெல்லாம், எவ்வளவுதான் விஞ்ஞான அறிவு மேம்பாடடைந்திருந்தாலும், நிலா வுலகுக்கே மனிதன் போய்வந்து, நிலைமைகளைத் தெளியுபடுத்திக் காட்டினுலும், அறிவுத் தெளிவு பெற்ற—நாகரிக மக்களாக நாட்டவரை இருக்க இடமளிகக மாட்டார்கள் அநத நாடோடிக் கூட்டத்தார் என்பதுதானே!

தனிக்கவனம் தேவை!

நிலச் சீர்திருத்தம் தொடர்பாக தமிழ்நாடு அரசு அறிவிததிருக்கும் வரம்பளவும், அது எந்த நாள் முதல் உயிர்ப்பெறுகிறதென்ற அறிவிப்பும் உண்மையிலேயே பாராட்டத்தக்கதாகும், ஒரு குடும்பத்துக்குப்போதும் என்கிற அளவான 15 ஏகரும், அது, அறிவிக்கப்பட்ட நாளான பிப். 26 முதலே நடைமுறைக்குவரும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. சுமார் 2 லட்சம் ஏக்கரா நிலம் இதன் மூலம் கிடைக்கும் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. அரசின் கைக்கு மாறவிருக்கும் இந்த நில உரிமை, மக்கள் உரிமையாக மாற்றப்படும்போது, சரியான முன் எச்சரிக்கையுடன் ஏழைகளுக்கு மட்டுமே கிடைக்குமாறு பார்த்துக் கொள்வதில் முதலமைச்சர் அக்கறை எடுத்துக்கொண்டால், எதிர் பார்த்த பலன், நல்லபடி கிடைக்கும். அதுபோலவே, பட்டா வழங்கப்பட்ட பின்பு, கூட்டுப் பண்ணை முறைபற்றிய முறையில் அரசின் சிந்தனை செயல்பட்டால் இன்னும் அதிகப் பலன் கிடைக்கும் தமிழக அரசு இதில் பின் வாங்காது என்றஉறுதி மக்களுக்கு உண்டு.

★

15-ம் பக்கத் தொடர்ச்சி

தமிழின் சீர்மைக்கு வெடிவைக்கும் வேலையை எந்த உருவத்தில் செய்தாலும், அவன் தமிழ்ப்பகைவன் என்பதை தமிழகம் உணரவேண்டும்.

'பட்டி மன்றங்கள்' நடத்துவோரின் நெஞ்சகத்து ஆழத்தை அறிந்தவர்க்கே மேற்சொன்ன உண்மைகளை உணரமுடியும்!!

எனவே,

பட்டி மன்றமா? தமிழ் வெட்டி மன்றமா? என்று அறிந்துகொள்ள வேண்டிய நெருக்கடி தமிழ்ப் பாதுகாவலர்க்கு உருவாகிவிட்டது.

கறையான் புற்றெடுக்க, கரும் பாம்பு உள்நுழைந்துவிட்டது.

புற்றுக்கு அழிவில்லாமல், பாம்பை அடித்தாலும்சரி, அல்லதுபுற்றையே அழித்தாலும் சரி, எப்படியோ பாம்பை ஒழித்தாகவேண்டும்.

பாம்புகள் இதை உணர்ந்து கொள்க!!

★

சிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3
...காஞ்சி நம்பி கொ. அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.